இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சிறு பிள்ளைகளை இயேசு தொடவேண்டுமென்று, அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். இயேசு இதைக் கண்டு, கோபம் கொண்டு, "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். பிறகு அவர் அவர்களை அரவணைத்து, தம் கைகளை அவர்கள்மீது வைத்து ஆசி வழங்கினார். (மாற்கு 10:13-16)

# இனவெறிக்கும் இனப் பாகுபாட்டிற்கும் எதிராக வத்திக்கான் செயல்படும்

வத்திக்கான்: இனப்பாகுபாட்டினையொட்டிய அனைத்து வடிவங்களையும் ஒழிப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள அனைத்துலக ஒப்பந்தத்தில் இணைந்துள்ள திருப்பீடம், இனவெறி, இனப்பாகுபாடு, அந்நியரின் மீது உருவாகும் அச்சம் மற்றும் அதனால் எழும் வன்முறைகள் அனைத்திற்கும் எதிராகப் போராடி வருகிறது என்று திருப்பீடத் துறையின் பன்னாட்டு உறவுகள் செயலர் பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் அவர்கள் ஐ.நா. அவையில் ஆற்றிய உரையில் கூறினார்.

ஆப்ரிக்க வழிமுறையில் வந்த மக்களுக்கு சமத்துவம், இன அடிப்படையில் நீதி, மற்றும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஈடு வழங்குதல் ஆகியவற்றை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட டர்பன் அறிக்கையின் (Durban Declaration) 20-ம் ஆண்டு நிறைவையொட்டி, ஐ.நா. அவையில் இடம்பெற்ற கூட்டத்தில், அவர் மேற்கண்டவாறு கூறினார்.

### இனவெறியை வேரறுக்கும் கடமை

ஒவ்வொரு மனிதரும், சமமான மாண்புடனும், உரிமைகளோடும் படைக்கப்பட்டுள்ளார் என்ற அடிப்படை உண்மைக்கு எதிராக வளர்ந்துள்ள இனவெறியை வேரறுப்பதோடு, அனைவரும் உடன்பிறந்தோர் என்ற உணர்வை வளர்ப்பது நம் அனைவரின் கடமை என்பதை பேராயர் காலகர் அவர்கள் தன் உரையில் வலியுறுத்திக் கூறினார்.

மனித சமுதாயத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து முன்னேற்ற முயற்சிகளிலும், இனவெறியும், இன பாகுபாட்டு நடவடிக்கைகளும் பரவியிருப்பதை, Fratelli Tutti என்ற தன் திருமடலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை, பேராயர் காலகர் அவர்கள் தன் உரையில் நினைவுறுத்தினார்.

### ஆப்ரிக்க வழிமுறை வந்த மக்களுக்கு உதவிகள்

ஆப்ரிக்க வழிமுறையில் வந்த மக்களுக்கு உதவிகள் செய்ய ஒரு நிரந்தர அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதை திருப்பீடம் பெரிதும் வரவேற்கிறது என்று கூறிய பேராயர் காலகர் அவர்கள், இவ்வமைப்பின் செயல்பாடுகள், ஒவ்வொரு நாட்டிலும், பன்னாட்டளவிலும் செயல்பட திருப்பீடத்தின் ஒத்துழைப்பு நிச்சயம் உண்டு என்பதையும் எடுத்துரைத்தார்.



பன்னாட்டு உறவுகள் திருப்பீடத் துறையின் செயலர், பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் -

### மத நம்பிக்கையாளர்களுக்கு எதிராக...

சகிப்புத்தன்மை குறைந்து, பகைமை உணர்வுகளும், வன்முறைகளும் பெருகியுள்ளதற்கு தன் கவலையை வெளியிட்டுள்ள டர்பன் அறிக்கை, இத்தகைய சகிப்பற்ற தன்மை மத நம்பிக்கையாளர்களுக்கு எதிராகவும் பின்பற்றப்படுவதைக் குறித்து தன் கவலையை வெளியிட்டுள்ளது என்பதை, பேராயர் காலகர் அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

### கருவில் வளரும் குழந்தையின் உரிமை

இதேவண்ணம், மனித உயிர்களுக்கு வழங்கப்படும் மாண்பு பல்வேறு வழிகளில் தரம் பிரிக்கப்படுவதால், கருவில் வளரும் குழந்தைகளின் உயிர்கள், குறிப்பாக, அவ்வுயிர்களின் பாலினம், அவற்றில் உருவாகும் குறைபாடுகள் ஆகியவற்றைப் பொருத்து, அவ்வுயிர்களின் மாண்பு குறைக்கப்படுவதை, என்றும் திருப்பீடம் எதிர்த்து வருகிறது என்பதையும், பேராயர் காலகர் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டார்.

ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்

# 2023-ல் ஆயர்கள் மாமன்றம் தூய ஆவியாருக்குச் செவிமடுப்பதில் கவனம் செலுத்தும்

**வத்திக்கான்:** கடந்த 18, செப்டம்பர் அன்று உரோம் மறைமாவட்டத்தில் இருந்து கத்தோலிக்கர்களுடன் உரையாற்றிய திருத்தந்தை, 2023-ல் கூடவுள்ள ஆயர்கள் மாமன்றத்திற்கான ஆயத்துப் பணிகள் அக்டோபர் 2021 தொடங்கி, அக்டோபர் 2023 வரையிலும் மூன்று கட்டங்களாக நடை பெறும் என்று குறிப்பிட்டார். அவர் மேலும், "இது கருத்துக்களைச் சேகரிப்பது பற்றியது அல்ல மாறாக, தூய ஆவியாருக்குச் செவிமடுத்தலை மையம் கொண்டிருக்கும் என்றார்.

1962-1965-ல் நடைபெற்ற இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு மிக முக்கியமான கத்தோலிக்க நிகழ்வு என்று சில வத்திக்கான் ஆய்வாளர்கள் விவரிக்கும் இம்மன்றம் பற்றிய அவரது எண்ணத்தையும் நம்பிக்கையை திருத்தந்தை வெளிப்படுத்தினார். அவர் புதிய ஏற்பாட்டு நூல் ஒன்றைச் சுட்டிக்காட்டி, அதில் முதல் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இணங்கிப்போக முடியாதக் கருத்து வேறுபாடுகள் குறித்து, ஒன்றாகக் கூட்டி



திருத்தந்தை உரோமை மறைமாவட்டத்தின் மக்களைச் சந்தித்து ஆசி வழங்குகிறார்.

தூய ஆவியாரின் உதவியில் நல்லிணக்கம் கண்டார்கள் என்பதை நினைவூட்டினார்.

2023-ல் வத்திக்கானில் நடைபெறவுள்ள ஆயர் மாமன்றத்தையொட்டி ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மறைமாவட்டங்கள் தோறும் ஆற்ற வேண்டிய ஆய்வுகளில் கவனம் செலுத்தும்படி திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தினார். இதன்படி வத்திக்கான் தயாரித்தளித்துள்ள ஆய்வுத்தாள்களின் உதவியோடு, உலகளாவிய மறைமாவட்டங்களில் ஆய்ந்துணரும் கலந்துரையாடல் நிகழ்வுகள் இந்த அக்டோபர் மாதத்தில் கலந்துரையாட உதவும் ஒரு சிறப்பு ஆவணம் மற்றும் கையேட்டை வத்திக்கான் வெளியிட்டது. இதன்வழி, ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் அனைத்துத் தரப்பினரோடும் கலந்துரையாடல் வழி உண்மைநிலை பகிர்வுகள் சேகரிக்கப்படும். இவை முற்றிலும் தூய ஆவியாரின் உடனிருப்பிலும் இயக்கத்திலும் செயல்படுத்தப்படும் என்பதை அன்று வலியுறுத்தினார் திருத்தந்தை.

திருஅவையின் அடித்தளம், அருள்பணியாளர்கள் மற்றும் ஆயர்களை சார்ந்தது என்ற எண்ணத்திலிருந்து விடுபட்டு, அது, அனைத்து மக்களையும் உள்ளடக்கியது என்பதை வெளிப்படுத்தும் முயற்சியாக, அடுத்துவரும் ஆயர்கள் மாமன்றம் அமையும் என்று தான் நம்புவதாக, திருத்தந்தை, சமீபத்தில் கருத்துரைத்தார்.

இதன்படி, இந்த அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மேற்கூறிய ஆய்வு கூட்டங்கள் நடைபெறும் என்பது உறுதியாகவுள்ளது. அனைத்துத் தரப்பினரின் பங்கெடுப்பும் ஒத்துழைப்பும் அவசியம் என்பதோடு, 2023-ல் வத்திக்கானில் நடைபெறுவுள்ள ஆயர்கள் மாநாட்டில் மக்கள் குரல் கேட்கப்பட தூய ஆவியாரின் உதவியை நாடுவோம். உங்களை வழிநடத்தும், தூய ஆவியாரை நம்புங்கள். கலந்துரையாடலுக்குள் நுழைய பயப்பட வேண்டாம் மற்றும் இது மீட்பின் உரையாடல், "என்று திருத்தந்தை கூறினார்.

# சிறார் சம்பந்தப்பட்ட பாலியல் மற்றும் சித்ரவதை சம்பவங்களை கையாள்வது

கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் 'தொழிற்துறை தர அலுவலகம் நடத்திய சிறார் நலன் மீதான தொடர் கலந்துரையாடலில் ஆகக்கடைசியாக சிறார் சம்பந்தப்பட்ட பாலியல் மற்றும் சித்ரவதை சம்பவங்களைக் கையாள்வது பற்றி பேசப்பட்டது. 14 ஆண்டுகள் காவல்துறை படையில் பணியாற்றும் ASP நொர்பலியானி (ASP Norfazliyani) கடந்த மாதம் 25ம் தேதி இயங்கலை வழி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். தற்போது அவர், D11 எனப்படும் பாலியல், பெண்கள் மற்றும் சிறார் விசாரணைப் பிரிவில் பணியாற்றுகிறார். D11 பிரிவு, குற்றவியல் விசாரணைத் துறையின் கீழ் இயங்குகிறது.

பாதிக்கப்பட்ட சிறார் வாக்குமூலம் எடுப்பது மற்றும் காணொளி பதிவு செய்வது தொடர்பான தொடக்கநிலை நடைமுறை பற்றி ASP நொர்பலியானி பகிர்ந்து கொண்டார். இவை பின்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மருத்துவ அறிக்கை, உடற்காயங்கள் தொடர்பான நிழற்படங்கள் முதலியவையும் அரசாங்கத் துணை வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்படும்.

பாலியல் குற்றம் நிகழ்ந்திருந்தால், பாதிக்கப்பட்ட சிறார் நேரடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் படுவார். பின்னர் காவல்துறையில் புகார் செய்யலாம். சிறார் சித்ரவதைக்கு ஆளாகியுள்ளார் என மருத்துவர் சந்தேகப்பட்டால் சட்டப்படி காவல்துறையிடமோ, சமூக நலத்துறையிடமோ புகார் செய்ய வேண்டும்.

இணையத்தில் வழி ஏற்படும் 'சிறார் பாலியல் முறைகேடு' பற்றி ASP



நொர்பலியானி குறிப்பிட்ட போது சிறார்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் அபாயங்களைச் சுட்டிக்காட்டினார். WhatsApp, Facebook, WeChat போன்ற சமூக ஊடகங்கள் பற்றி பெற்றோர் அறிந்திருப்பர். ஆனால், Bigo, Snapchat, YouTube, TikTok, chat groups போன்ற சமூக ஊடகங்கள் சிறார்களுக்கு மிகவும் கைவந்த கலையாக உள்ளது. பாலியல் காமுகன்கள் குறித்து சிறார்கள் தெரிந்து வைத்துக் கொள்வதற்கு பெற்றோர் வழிகாட்ட வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

*தமிழாக்கம் : அந்தோணி இன்னாசி*

## இயங்கலை வழி ஆசிய கத்தோலிக்க மருத்துவர் கூட்டு மன்றத்தின் மாநாடு நடைபெற்றது

**பெட்டாலிங் ஜெயா:** ஆசிய நாடுகளின் கத்தோலிக்க மருத்துவர் கூட்டு மன்றத்தின் 17-வது மாநாட்டை, மலேசிய கத்தோலிக்க மருத்துவர் மன்றம் ‘குணப்படுத்துதலும் ஆன்மீகமும்’ எனும் கருப்பொருளில் ஏற்பாடு செய்தது. இந்த கூட்டு மன்றத்தின் மாநாடு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவது வழக்கம். இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளை ஏற்று நடத்த மலேசியாவுக்கு



கடந்தாண்டு வாய்ப்பு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் தொற்றுநோயின் காரணமாக இம்மாநாடு ஒத்திவைக்கப்பட்டு, இவ்வாண்டு நடைபெற்றது.

டாக்டர் ஃப்ரெடி லோவின் தலைமையின் கீழ், செயலவை உறுப்பினர்கள் வெற்றிக்காக இடைவிடாமல் உழைத்தனர். அவர்களது சொந்த மருத்துவ பணிகள் மத்தியில் இயங்கலை வாயிலாக இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது ஒரு மாபெரும் பணியாகத் தோன்றியது. இருப்பினும் எங்கள் ஒவ்வொருவரின் மீதும் நம் ஆண்டவரின் அருள்கரம் இருந்து உதவியதால், அவரின் வழிகாட்டுதலில் இப்பணி சிறப்புற, உதவியாக இருந்தது என்பது வெள்ளிடைமலை.

இந்த மாநாடு, இயங்கலை வழியாக கடந்த செப்டம்பர் 16 முதல் 19 வரை மூன்று கண்டங்களின் மற்றும் 14 நாடுகளைச் சேர்ந்த 253 பிரதிநிதிகளுடன் நடைபெற்றது. இதில் மருத்துவர்கள், செவிலியர்கள், துணை சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களும் அடங்குவர். இது பிரதிநிதிகளின் விரிவான பங்கேற்பை பெருமைப்படுத்தியது என்பது மட்டுமல்லாமல், உலகத் தரம் வாய்ந்த அனைத்துலக பேச்சாளர்களையும் கொண்டிருந்தது.

மாநாட்டை கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியோவ் அவர்கள் திருப்பலியோடு துவக்கி வைத்தார். நிறைவாக, அருள்பணியாளர் பிலிப் சுவா அவர்கள் மற்றொரு திருப்பலியோடு மேற்கண்ட மாநாட்டை ஒரு நிறைவுக்குக் கொண்டு வந்தார். மேலும் இதே மாநாட்டின் போது, இந்த கத்தோலிக்கர் மருத்தவர் மன்றம் அதன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தை நடத்தி, 2021- 2024 இடைப்பட்ட காலத்துக்கான புதிய நிர்வாக செயலவை உறுப்பினர்களைத் தேர்வுச் செய்தது. அடுத்த மாநாடு 2024-ல் தென் கொரியாவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

*Dr Sharon Gopalan (தமிழாக்கம் ஆர்.கே)*

## துயருறும் மக்களுடன் ஒன்றிணைந்திருங்கள் -திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்:** தங்கள் சொந்த நாடுகளை விட்டு வெளியேறி பிற நாடுகளில் அடைக்கலம் தேடும் மக்களை திறந்த மனதுடன் வரவேற்குமாறு, அனைத்துக் கத்தோலிக்கர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

107-வது குடிபெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோர் உலக நாள் செப்டம்பர் 26ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்பட்டதையொட்டி, இவ்வழைப்பை விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவரும் தங்கள் முற்சார்பு எண்ணங்களையும் அச்சங்களையும் களைந்து, ஒன்றிணைந்து நடைபோடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளோர், புலம்பெயர்ந்தோர், நாட்டிற்குள்ளேயே குடிபெயர்ந்தோர், வர்த்தகப் பொருட்களாக நடத்தப்படுவதால் பாதிக்கப் பட்டோர், கைவிடப்பட்டோர் என



அனைத்து மக்களுடன் ஆதரவாக ஒன்றிணைந்து நடக்க வேண்டியதன் அவசியத்தை கத்தோலிக்கரிடம் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எவரையும் ஒதுக்கிவைக்காமல், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அனைவரையும் அழைக்கிறார் திருத்தந்தை .

## இப்பூமியைப் பாழ்படுத்தும் செயல்களைக் கைவிடுங்கள் - திருத்தந்தை

**வத்திக்கான்:** நாம் பயன்படுத்தும் பொருள்கள், இப்பூமியை எவ்வாறு புண்படுத்துகின்றன என்பது பற்றி சிந்தித்து, வாழும்முறையை மாற்றிக்கொள்ளுமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செப்டம்பர் 28, இச்செவ்வாயன்று அழைப்பு விடுத்துள்ளார்.



செப்டம்பர் முதல் தேதியிலிருந்து, வருகிற அக்டோபர் 4ம் தேதி வரை சிறப்பிக்கப்பட்டு வரும் படைப்பின் காலத்தை மையப்படுத்தி, குறுஞ்செய்திகளை வெளியிட்டுவரும் திருத்தந்தை, நாம் வாழ்கின்ற இப்பூமிக் கோளத்தை சூழலியல் அழிவிலிருந்து காப்பாற்றுமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

“நலவாழ்வு, சமுதாயம், சூழலியல் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் இக்காலக்கட்டத்தில், நாம் பயன்படுத்தும் பொருள்கள், இப்பூமிக்கு எத்தகைய சேதங்களை விளைவிக்கின்றன என்பது பற்றிச் சிந்திப்போம். படைப்பைக் கையாள்வதைப் பொருத்தவரை, நம் வாழ்க்கை முறையை மிகவும் எளிமையானதாகவும், மதிப்புமிக்கதாயும் அமைத்துக்கொள்ளும் வழிமுறைகளைத் தெரிவுசெய்வோம்” என்ற சொற்கள் அவரது டுவிட்டர் செய்தியில் இடம் பெற்றிருந்தன.

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை; நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம் (24,1) என்ற திருப்பாடல் வரிகளை மையப்படுத்தி, “அனைவருக்கும் ஓர் இல்லம், கடவுளின் முகத்தைப் புதுப்பித்தல்” என்ற தலைப்பில், இவ்வாண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து, அசிசி நகர் புனித பிரான்சிஸ் விழாவாகிய அக்டோபர் 4ம் தேதி வரை, கிறிஸ்தவர்கள், படைப்பின் காலத்தை சிறப்பித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மியான்மாரின் புலம்பெயர்ந்தோருக்கு உதவும் மனிதநேய கத்தோலிக்கர்

**வத்திக்கான்:** மியான்மாரின் பதட்டநிலைகளால் அங்கிருந்து வெளியேறி அடைக்கலம் தேடும் கிறிஸ்தவ புலம்பெயர்ந்தோருக்கு உதவிகளை ஆற்றிவருகிறது, இந்தியாவின் மிசோராம் மாநில காரித்தாஸ் அமைப்பு.

கடந்த 6 மாதங்களில் மட்டும் மியான்மாரிலிருந்து ஏறக்குறைய 15,000 புலம்பெயர்ந்தோர் இந்தியாவின் மிசோராம் மாநிலத்தில் வாழ்வதாக உரைத்த Aizawl மறைமாவட்ட ஆயர் Stephen Rotluanga அவர்கள், கத்தோலிக்க காரித்தாஸ் அமைப்பு, CRS கத்தோலிக்க அமைப்பு, மிசோராமின் இளையோர் அமைப்புக்கள், அரசு சாரா அமைப்புக்கள் ஆகியவைளோடு இணைந்து கத்தோலிக்க மறைமாவட்டம் அனைத்து மனிதநேய உதவிகளையும் ஆற்றிவருவதாகத் தெரிவித்தார்.

கடந்த பல ஆண்டுகளாக மியான்மார் நாட்டிலிருந்து மிசோராம் மாநிலத்திற்கு வந்தும் போய்க்கொண்டும் இருக்கும் புலம்பெயர்ந்தோரை விரிந்த கரங்களுடன் வரவேற்று, மிசோராம் கிறிஸ்தவ இளையோர் உதவிவருவதைக் குறித்து பேசிய ஆயர் Rotluanga அவர்கள், கத்தோலிக்க திருஅவை நடத்திவரும் பல புனர்வாழ்வு மையங்கள் வழியாக உதவிகள் ஆற்றப்படுவதாகத் தெரிவித்தார்.

மிசோராம் மாநிலத்தின் 11 இலட்சம் மொத்த மக்கள் தொகையில் 90 விழுக்காட்டினர் கிறிஸ்தவர்களாக இருக்கும்



*மிசோராம் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மியான்மார் அகதிகள்*

நிலையில், வங்கதேசத்திற்கும் சுக்கும் மியான் மாருக்கும் இடையே உள்ள மிசோராம் மாநிலத்தில் மியான்மார் கிறிஸ்தவர்கள் அடைக்கலம் தேடிவருகின்றனர். (UCAN)

## இணைந்து வாழ்வதே இல்லறம்

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 27-ம் ஞாயிறுவில் இணைகிறோம். திருமணம் எனும் அருளடையாளம் இன்றைய வாசகங்களின் மையமாக உள்ளது. திருமணங்கள் கடவுள் இணைக்கும் ஓர் அருஞ்செயல். திருமணத்தில் இணையும் ஆணும் பெண்ணும் ஆண்டவன் செயல்பட உதவும் இன்றியமையாத கருவிகள். அனைத்து சமயங்களிலும், நம்பிக்கைகளிலும் திருமணமானது தூய்மையின் அடையாளமாக துலங்குகின்றது. கத்தோலிக்க விசுவாசத்தின்படி திருமணம் ஒரு புனிதமிக்க பிணைப்பாக மட்டுமின்றி அருளடையாளங்களில் ஒன்றாக நிலைப்பெற்றுள்ளது.

இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் “மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்” என்கிறார். “இல்லறத்தில் இணையும் மூவர்” எனும் நூலில் மறைந்த பேராயர் புல்டன் ஷீன் திருமணத்தின் நிலைத்தத் தன்மையையும், அதன் முறிவுபடா குணத்தையும் பற்றிக் குறிப் பிடும் போது, மணமக்களோடு கண்ணுக்குப் புலப்படா முறையில் மூன்றாவது நபராக இறைமகன் இயேசுவும் திருமணப் பந்தத்தில் இணைப்படுவதை எடுத்தியம்புகின்றார். இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஒருவரில் ஒருவர் சங்கமமாகும் ஒருமை, ஒற்றுமை நிகழ்வான இல்லற மாட்சியை சுட்டுகிறது. குறுகிய காலத் தோழமை மண உறவில் வாழப்பழகி வரும் இவ்வுலகினர். தங்களது தாய் தந்தையை விட்டுப் பிரிந்து, தன் மணவாட்டியாம் திருஅவையோடு ஒன்றித்து, ஒரே உடலாய் உள்ள மணவாளனாம் இயேசு ஆண்டவரைப் பின்பற்றி கணவனும், மனைவியுமாக சுயநலம் கருதாது பிறர் நல நோக்கத்தோடு நிலைத்திலுக்க வேண்டும். அப்போதுதான் திருமண உறவில் அழிந்து கொண்டிருக்கும் சுயநல உலகானது அணிப் பெற்றுத் திகழும். ஏனெனில் திருமண உறவே அனைத்து நற்செயல்களுக்கும் மையமாகத் திகழ்கிறது. ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணைந்த பின், இணைந்து வாழும்போது திருமண முறிவுக்கு இடமளித்தால் அந்தத் தலைமுறையோடு தலைமுறை வாழ்ந்து அழியும்.

திருமணத்தில் இணைந்தவரைப் பிரிக்கும் முயற்சி தலைமுறையை அழிக்கும் முயற்சி. அன்றிலிருந்து இன்றுவரை மனிதருள் சிலர், திருமணத்தை எப்படி பிரிப்பது? என்று சுயநலத்தோடு முயற்சி செய்துகொண்டே இருக்கின்றனர். அத்தகைய முயற்சிகளுள் ஒன்று இன்றைய வாசகப் பகுதி. தங்களின் சுயநல முயற்சிக்குப் பக்கத் துணையாக விவிலியத்திலிருந்து மோசேயைத் துணைக்கு அழைத்துள்ளனர். ஆனால் இயேசுவோ மோசேயின் கட்டளைக்கான பின்னணியைத் தந்து விளக்குகிறார். மூல நிலைக்கு அழைத்துச் சென்று உண்மை நிலையை உறுதிப்படுத்துகிறார், எனவே இயேசு கூறின இறைவார்த்தையை ஒவ்வொரு கணவரும் மனைவியும் பின்பற்றி வாழ முயல வேண்டும். நற்செய்தியில் ஆண்டவர் இயேசு எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டு, “கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்” என்கிறார். அப்படியானால் திருமண உறவில் இணைந்திருக்கும் கணவன் மனைவியைப் பிரிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்பது தான் இறைமகன் இயேசுவின் கட்டளை யாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்வோம்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி, கெடா*

### பொதுக்காலம் 27-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | தொ.நூ. 2: 18-24 |
| தி. பாடல்: | 128: 1-2. 3. 4-5. 6 |
| 2ம் வாசகம்: | எபி 2: 9-11 |
| நற்செய்தி: | மாற்கு 10: 2-16 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை -வாரம் 3